மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறி இருக்கிறேன். இருந்தாலும் மறுபடியும் கூறுகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதித் திட்டத்தின் கீழ் 1979–80-ல் அந்த கால்நடை மருத்துவமனை, பிரதம மருத்துவ நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு இந்த அரசு ஏற்பட்டவுடன், பல கோடி ரூபாய் கொடுத்து, கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். அதன் அடிப்படையில் பல மருத்துவமனைகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே தமிழகத்திலே, கால்நடை வளர்ப்புக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டு, மத்தூர் கேட்டில் பார்ம் இருக்கின்ற காரணத்தினாலே, மேலும் அங்கே ஒரு இயக்குநர் அகமே ஏற்படுத்தலாமா என்ற அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்குரிய வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள தலைமை அலுவலகத்தை கிருஷ்ணகிரிக்கு மாற்றத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கம் திட்டம்.

(வினா எண். 79—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிழக்கு முகவை மாட்டத்தில் (Frozen Semen Bank) உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கிழக்கு முகவை மாவட்டத்தில் உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் :பேரவைத் தலைவர் அவர்களே, உறைவிந்து உற்பத்தி நிலையம் வேறு எந்தெந்த மாவட்டங்களில் துவக்க அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்

1981 ஏப்ரல் 23]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒரு திரவ நைட்ரஜன் உற்பத்திக் கூடமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஒரு உறைவிந்து நிலையமும் ஆரம்பிக்கப்படுகின்றன.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் 1981—82-க்குள்ளாக தமிழகம் முழுவதும் உறைவிந்து நிலையங்களைப் படிப்படியாக துவக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்துத் தான் அது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

I—2. தகவல் கோரல்.

பல சிறு பிரச்னைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் எழுதிக் கேட்டு அதற்கு பிறகு அவையிலே கொண்டு வரலாமே தவிர ஒழுங்குப் பிரச்னையில் கொண்டு வரக்கூடாது. இதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். ''காலம் பொன் போன்றது'', காலத்தைக் காட்டக் கூடிய நமது கடிகாரம் சரியாக ஓடாமல் உயிர் ஊசலாடுகிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதற்காக ஊசலாட வேண்டாம். ''ஓல்ட்டேஜ் ட்ராப்'', ஆகியிருக்கிறது. அது தான் காரணம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினேன். சரியாக பத்து மணியான உடனே கேள்விகளை பாதியிலே முடித்து, மீதியை அச்சடித்து தருவதாகக் கூறினீர்கள். இதனால் கேள்வி கேட்கின்ற வாய்ப்பினை இழந்து விடுகிறோம். துர்பாக்கியம், என்னுடைய கேள்விகள் அதிலே இருந்தன.